<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 9/2015**
<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>
<u>வாக்குமூலம் – நீ.ம.சா–1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : சிவக்குமார் | | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : பழனிச்சாமி | | தொழில் | : | இளநிலை பொறியாளர் (திட்டம்), திருப்பூர் மாநகராட்சி. |
| கிராமம் | : | | வயது | : | 50 |
| தாலுகா | : திருப்பூர் | | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு ஜீன் மாதம் 09ம் நாள் சாட்சியம்.

---

<u>முதல் விசாரணை</u>

நான் திருப்பூர் மாநகராட்சி அலுவலகத்தில் இளநிலை பொறியாளர் (திட்டம்), ஆக பணி புரிகிறேன். கடந்த 23.04.2025 அன்று அ.வ.எண்.9/2015 வழக்கில் இந்நீதிமன்றத்தில் இன்று திருப்பூர் மாநகராட்சி ஆணையரை திருப்பூர் மாநகராட்சியின் மண்டலம் எண்.01, புதிய வார்டு எண்.25இ க.ச. எண்.612/2, 15.வேலம்பாளையம் கிராமம், சொத்துவரி வரிவிதிப்பு எண்.032/025/903899 பழைய வரி விதிப்பு எண்.032/1402404 திருமதி.V.ஜானகி, க/பெ.வரதராஜன் என்பவர் பெயரிலுள்ள சொத்திற்கான கட்டிட அனுமதி விபரங்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்திட அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அழைப்பாணையில் சம்மந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

திருப்பூர் மாநகராட்சி பொறுப்பு ஆணையர் அவர்கள் என்னை இந்த வழக்கில் முன்னிலையாக அதிகாரம் அளிப்பு கடிதம் அளித்துள்ளார்கள். நான் அதனை தற்போது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். **(திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அதிகாரம் அளிப்பு கடிதம் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது).** அழைப்பாணையில் கோரப்பட்டிருந்த ஆவணங்கள் 17 ஆண்டுகளுக்கு முந்தைய ஆவணங்கள் ஆகும். அதனை தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை என்பதால் மேற்படி

ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u> **(பிரதிவாதிகள் தரப்பு)**

ஒரு இடம் அல்லது கட்டிடத்திற்கு வரிவிதிப்பு செய்யவேண்டும் என்றால் அது சம்மந்தப்பட்ட ஆவணங்களை வைத்து தான் செய்வோம் என்றால் சரிதான். ஒரு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வாங்கும்போது அனுமதிக்கப்பட்ட வரைபடத்தின் ஒரு நகல் எங்களிடம் இருக்கும் என்றால் சரிதான். நான் எங்கள் அலுவலகத்தில் உள்ள கோப்புகளை சரிவர தேடிப்பார்க்காமல் நீதிமன்றத்தில் கிடைக்கவில்லை என்று வாதிக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.06.09 18:18:56 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.